# <u>சாதாரணக்கூட்டம்</u>

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2018 ம் ஆண்டு ஜுலை மாதம் 31 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**<u>பொருள் : 1</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டு பகுதிகளிலும் புதிதாக அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகள், கட்டிடங்கள், தெருவிளக்கு அமைத்தல் ஆகியவைகளுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு இடத்தினை ஆய்வு செய்து சான்று பெறுவதற்கு தலா ஒரு இணைப்புக்கு ரூ.300 வீதம் ஆய்வுக் கட்டணமாக வழங்க வேண்டியுள்ளது. எனவே 2018–2019 ஆம் நிதியாண்டிற்கு ஆய்வுக் கட்டண செலவுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 139 /2018/இ1)

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018 – 2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 2</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் உலர் கழிவுகளை நுண் உரமாக்கும் மையத்தில் (MCC) கொண்டு சேகரம் செய்யும் பொருட்டு, ஒரு MCC 5.மெ.டன் அளவிலும், 3 Onsite composting வார்டு எண் 3,11 மற்றும் 14 ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி MCC (ம) Onsite இடத்திற்கு முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பினை கொண்டு செல்வதற்கான வரைபடம் Auto cad ல் வரைந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.48,000/- க்கு மன்ற பொருள் வைக்க தனி அலுவலரின் அனுமதி வைக்கப்படுகிறது. (ந.க.எண் 507/2018/எச்1)

**<u>அலுவலக குறிப்பு</u>**
தனி அலுவலர் அனுமதிக்கலாம்

**<u>பொருள் : 3</u>**

பல்லடம் நகரம், நாரணாபுரம் கிராமம் புல எண் 571/3 ல் பெட்ரோலியப் பொருட்கள் வைத்து விற்பனை செய்ய தடையின்மை கோரி மாவட்ட வருவாய் அலுவலர் திருப்பூர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. புல எண் 571/3 நாரணாபுரம் கிராமம், நகராட்சி முழுமை திட்டத்தின் படி விவசாயப் பகுதியில் அமைகிறது. ஷ புல எண்ணில் பெட்ரோலியப் பொருட்கள் விற்பனை மற்றும் இருப்பு வைத்தல் தொடர்பாக நகராட்சிக்கு தடையேதும் இல்லை தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 4</u>**

பல்லடம் நகரம் பல்லடம் கிராமம் புல எண் 261/பி12 மட்டும் நகராட்சி பகுதியில் அமைகிறது. க.ச.எண் 262/பி12, 466/1,2,4 மற்றும் 468/2 ல் அமையும் 0.028.0 ஹெக்டேர் நிலத்தினை இரு வழி சாலை அகலப்படுத்துதலுக்காக நெடுஞ்சாலை துறைக்கு நில மாற்றம் செய்வது தொடர்பாக நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என கடிதம் அனுப்ப தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் : 5</u>

பல்லடம் நகரம், பல்லடம் வட்டம் கிராமம் புல எண் 587/3 ல் 0.010.0 ஹெக்டேர் நிலத்தினை இரு வழி சாலை அகலப்படுத்துதலுக்காக நெடுஞ்சாலை துறைக்கு பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என கடிதம் அனுப்ப தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் : 6</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பில்லூர் அத்திக்கடவு இரண்டாவது கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து குடிநீர் பெறப்பட்டு சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இதுவரையில் 1 கி.லிக்கு ரூ.4.50 பைசா வீதம் கணக்கிட்டு குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நிர்வாக இயக்குனர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்களின் உத்தரவு எண் : B.P.MS.No:88 நாள்:08.11.2017 ல் இந்நகராட்சிக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீருக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள 1 கி.லி.க்கு ரூ.4.50 பைசா என்ற விகிதத்திலிருந்து 1 கி.லிக்கு ரூ.9.00 என்ற விகிதத்தின் படி விலையை 01.11.2017 முதல் உயர்வு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் உதவிப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (பில்லூர்) பொங்கலூர் அவர்களின் பட்டியல் எண்:0418307 நாள் :07.05.2018 ல் டிசம்பர் 2017 முதல் மார்ச் 2018 வரை உயர்த்தப்பட்ட குடிநீருக்கான நிலுவைத் தொகை கீழ்க்கண்டவாறு வழங்க கேட்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மாதம் | கொள்ளளவு (கிலி) | பழைய தொகை (ரூ) | பழைய கேட்பு(ரூ) | புதிய தொகை (ரூ) | புதிய கேட்பு(ரூ) | நிலுவை (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 12/2017 | 108671 | 4.50 | 489020 | 9.00 | 978039 | 489019 |
| 2 | 01/2018 | 118137 | 4.50 | 531617 | 9.00 | 1063233 | 531616 |
| 3 | 02/2018 | 115609 | 4.50 | 520241 | 9.00 | 1040481 | 520240 |
| 4 | 03/2018 | 115609 | 4.50 | 520241 | 9.00 | 1040481 | 520240 |
| | | | | | | | 2061115 |

மற்றும் மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி 1 கி.லி.க்கு 01.12.2017 முதல் ரூ.9.00 வீதம் வழங்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட நிலுவைத் தொகைகள் ரூ.20,61,115/—ஐ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: 850 /2003/இ1)

<u>**அலுவலககுறிப்பு:**</u>

1. தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் : 7</u>

பல்லடம் நகராட்சி நகரமைப்பு பிரிவு உரிமையாணை கட்டணங்கள் திருத்தி அமைத்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1890/ - ஐ தினத்தந்தி திருப்பூர் நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 8**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கழிவுநீரை பரிசோதனை செய்து அதற்கான அறிக்கையை நேரில் எடுத்து வருமாறு தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் கழிவுநீரினை AUM System, கோவை (Automation & Maintenance Management Systems) நிறுவனத்தின் மூலம் 24.07.2018 மற்றும் 26.07.2018 ஆகிய நாட்களில் பரிசோதனை செய்தமைக்கான தொகை ரூ.11,800 மற்றும் ரூ.35,400 ஆக மொத்தம் ரூ.47,200 ஐ வழங்குமாறு கேட்டுள்ளார். மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, 24.07.2018 அன்று கழிவுநீரை பரிசோதனை செய்தமைக்கான தொகை ரூ11,800ஐ பணி மேற்பார்வையாளரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே திரு.ஆர்.குமாரசாமி, பணி மேற்பார்வையாளரால் வழங்கப்பட்ட தொகை ரூ.11,800 ஐ அன்னாருக்கு வழங்கவும் மீதமுள்ள தொகையில் 2 சதவிகிதம் வருமான வரி பிடித்தம் செய்தது போக AUM SYSTEM, கோவை அவர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட செலவுத் தொகை ரூ.47,200 ஐ தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று வழங்க அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்850/2003/இ1)

**அலுவலககுறிப்பு:**

1. தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 9**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் **72814/2014/ஆர்1** நாள் **15.03.2018** ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க கல்வி நிறுவனங்களை நடத்தி வரும் நிறுவனத்திற்கு தெரிவிக்கும் வகையில் மாலை தமிழகம் நாளிதழ் நாள் **18.04.2018** ல் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ **23486** மாலை தமிழகம் நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 10**

வார்டு எண் 11 வடுகபாளையம் மேற்குபல்லடம் சாலையில் உள்ள போர்வெல் மோட்டார் பழுது ஏற்பட்டு இயக்க முடியாமல் உள்ளதால், புதியதாக 7.50 HP மின்மோட்டார் பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:139/2018/இ1)

**அலுவலககுறிப்பு:**

மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018-2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள் : 11**

இந்நகராட்சி வார்டு எண் 1 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் உள்ள தெருவிளக்கு மின் இணைப்பு பெட்டிகள், சர்வீஸ் ஒயர்கள், பழுதடைந்ததை மாற்றுதல், புதியதாக இணைப்பு பெறுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இதற்காகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:139/2018/இ1)

**<u>அலுவலககுறிப்பு:</u>**

மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018-2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>பொருள் : 12</u>**

பல்லடம் நகராட்சியில் **10.07.2018** மற்றும் **25.05.2018** அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.**2,42,726/-** ஐ நமது புரட்சி தலைவி அம்மா கோயம்புத்தூர், தினமலர், ஈரோடு நிறுவனத்திற்கு வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 13</u>**

வார்டு எண் 11 பொள்ளாச்சி சாலையில் நெடுஞ்சாலைத் துறையினர் சாலை விரிவாக்கம் செய்யும் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட குழாய்களை மாற்றியமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.0.30 இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:139/2018/இ1)

**<u>அலுவலககுறிப்பு:</u>**

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018-2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

2.மேற்கண்ட பணியை திரு.பி.முருகன், ஒப்பந்ததாரர் அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக பணியை மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 14</u>**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:**12** மேற்கு பல்லடம் அரிசன காலனி பகுதியில் புதிதாக இரும்பு குழாய்கள் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**1.00** இலட்சத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்: 139 /2018/இ1)**

**<u>அலுவலககுறிப்பு:</u>**

**1.** மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் **2018 – 2019** ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர்அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 15</u>**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடைகளின் குத்தகை காலம் **30.06.2018** உடன் முடிவடைவதால் **3** ஆண்டுகளை கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதன் பேரில் அக்குத்தகை உரிமத்தை மேலும் **3** ஆண்டுகளுக்கு புதுப்பிக்க அரசாணை எண் **92** நாள் **03.07.2007** ன் படி பழைய குத்தகை தொகையில் **15** சதவிகிதம் உயர்வு செய்து பழைய குத்தகைதாரர்களக்கு உரிமத்தை வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட விபரப்படி உள்ள குத்தகைதாரர்கள் கடையின் உரிம காலத்தை **01.07.2018** முதல் **30.06.2021** வரை புதுப்பித்து வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 16**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 25430/2016/எம்1 நாள் 24.07.2018 ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 375 (பி) ன் படி அந்தந்த நகராட்சிகளில் உள்ள ஆணையாளர்களை தனி அலுவலராக (Special Officer) நியமனம் சய்து தமிழ்நாடு அரசிதழ் எண் 244 நாள் 17.10.2016 மற்றும் அரசு ஆணை எண் 68 நாள் 30.06.2008 ன் மற்றும் தற்போது வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசிதழ் எண் 236 நாள் 30.06.2018 ல் தனி அலுவலரின் பதவி காலத்தை 01.07.2018 முதல் 31.12.2018 வரை நீட்டிப்பு செய்துள்ளதை மன்நறத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 17**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 20555/2018/ஆர்1 நாள் 23.07.2018 ல் அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 ன் படி 01.04.2018 முதல் சொத்துவரியினை கீழ்கண்டவாறு சீராய்வு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

| வ.எண் | விபரம் | சீராய்வு செய்ய வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50 % மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 100 % மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100 % மிகாமல் |

மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 20555/2018/ஆர்1 நாள் 30.07.2018 ல் அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018 ல் அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 ஐ திருத்தம் செய்து சொத்துவரி சீராய்வினை கீழ்கண்டவாறு செய்யுமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

| வ.எண் | விபரம் | சீராய்வு செய்ய வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50 % மிகாமல் |
| 2 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100 % மிகாமல் |

மேற்கண்ட அரசாணை எண் : 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018 ன் படி குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும், சொத்துவரியினை 01.04.2018 முதல் சீராய்வு செய்ய தனி அலுவலரின் அனுமதிக்கும் மற்றும் மேற்கண்ட அரசாணைகளை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட அரசாணைகளின் படி குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும், சொத்துவரியினை 01.04.2018 முதல் சீராய்வு செய்ய தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 1036/2018/அ3)

**பொருள் : 18**

குடிநீர் விநியோகப் பணிகள், குடிநீர் கசிவுகளை சரிசெய்ய பிட்டர் நியமித்தல், குடிநீர் சம்பந்தப்பட்ட அலுவலகப் பணி (தற்காலிகம்) செய்தல் பணிக்கு 26.07.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 139/2018இ1)

| | |
|---|---|
| 1.திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2.திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.02% அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1.இப்பணிக்கு நகரமன்றம் தனது 29.06.2018 தேதியிட்ட 120 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.10,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2.வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதம் அளித்துள்ள திரு.P.முருகன், ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 19**

குடிநீர் அல்லாத போர்வெல் மற்றும் கிணற்று நீர் மோட்டார்களை இயக்குவதற்கு (தற்காலிகம்) செய்தல் பணிக்கு 26.07.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1.திரு.P.முருகன்,<br>ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2.திரு.V.கருப்பசாமி,<br>ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.85% அதிகம் |

(ந.க.எண் 139/2018இ1)

**அலுவலக குறிப்பு :**

1.இப்பணிக்கு நகரமன்றம் தனது 29.06.2018 தேதியிட்ட 121 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.10,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2.வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதம் அளித்துள்ள திரு.P.முருகன், ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 20**

18 வார்டுகளிலும் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகளை சரி செய்தல் பணிக்கு 26.07.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1.திரு.P.முருகன், ஒப்பந்ததாரர்,<br>பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவு |
| 2.திரு.V.கருப்பசாமி,<br>ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.58% அதிகம் |

(ந.க.எண் 139/2018இ1)

**அலுவலக குறிப்பு :**

1.இப்பணிக்கு நகரமன்றம் தனது 29.06.2018 தேதியிட்ட 122 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரூ.7,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2.வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.P.முருகன், ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்

**பொருள் : 21**

வார்டு எண் 11 ஆண்டாள் நகர் தரம் பிரிக்கும் கூடம் மையத்திற்கு ஸ்டெட்ரிங் மெசின், தள்ளுவண்டி, பிளாட்பாம் போன்ற இயந்திரங்கள் வாங்குதல் பணிக்கு 26.07.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1.திரு.P.முருகன்,<br>ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட<br>0.14% குறைவு |
| 2.திரு.V.கருப்பசாமி,<br>ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட<br>2.39% அதிகம் |

(ந.க.எண் 139/2018இ1)

**அலுவலக குறிப்பு :**

1.இப்பணிக்கு நகரமன்றம் தனது 29.06.2018 தேதியிட்ட 125 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரு.3,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2.வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.14% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.P.முருகன், ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 22**

வார்டு எண் 11 ஆண்டாள் நகர் தரம் பிரிக்கும் கூடத்திற்கு சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி போன்றவை ஏற்படுத்தும் பணிக்கு 26.07.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1.திரு.P.முருகன், ஒப்பந்ததாரர்,<br>பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட<br>2.97% அதிகம் |
| 2.திரு.V.கருப்பசாமி,<br>ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட<br>0.12% குறைவு |

(ந.க.எண் 139/2018இ1)

**அலுவலக குறிப்பு :**

1.இப்பணிக்கு நகரமன்றம் தனது 29.06.2018 தேதியிட்ட 126 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரு.10,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2.வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 23</u>**

நகராட்சிப் பொதுப் பிரிவுக்கு பிளைவுட்டிலான டேபிள்கள் அமைத்தல் பணிக்கு 27.07.2018 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1.திருவாளர்கள்.நீலகிரி பர்னிச்சர்ஸ், போத்தனூர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2. திருவாளர்கள்.ஐஸ்வர்யா பர்னிச்சர்ஸ், போத்தனூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.46% அதிகம் |

(ரு.க.எண் 139/2018இ1)

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1.இப்பணிக்கு நகரமன்றம் தனது 30.04.2018 தேதியிட்ட 77 ஆம் எண் தீர்மானத்தில் மதிப்பீடு ரு.10,00,000/-க்கு அனுமதி வழங்கி உள்ளது.

2.வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதம் அளித்துள்ள திருவாளர்கள்.நீலகிரி பர்னிச்சர்ஸ், போத்தனூர் நிறுவனத்தின் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 24</u>**

அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்துதல் தொடர்பாக விளம்பர பேனர்கள் அமைத்தல் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தல் துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்தல் மற்றும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்துதல் தொடர்பான உத்தேச செலவு தொகை ரூ.**3.00** லட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

**தனி அலுவலர்**
**பல்லடம் நகராட்சி**